பிரதமர் பதவிக்கு மன்மோகன் சிங்கை தேர்ந்தெடுத்தது ஏன்?

புது தில்லி, நவ. 10: '2004–ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி வென்றதும், பிரதமர் பதவிக்கு மன்மோகன் சிங்கை தேர்வு செய்தது ஏன்?' என்ற காரணத்தை தனது சுயசரிதை புத்தகத்தில் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி விவரித்துள்ளார்.

மேலும், பிரணாப் முகர்ஜிக்கு பிரதமராகும் விருப்பம் இருந்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2004 தேர்தல் வெற்றிக்குப் பிறகு, சோனியாதான் பிரதமராவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. ஆனால், பிரதமர் பதவியை ஏற்க அவர் மறுத்தார். மன்மோகன் சிங் தொடக்கத்தில் பிரதமர் பதவியை ஏற்கத் தயங்கினாலும், பின்னர் சோனியா காந்தியால் சம்மதிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து, செவ்வாய்க்கிழமை (நவ. 10) வெளியான 'பிலாங்கிங்: எ ஜர்னி ஆஃப் லவ்' என்ற தலைப்பிலான 526 பக்கங்கள் கொண்ட தனது சுயசரிதை புத்தகத்தில் சோனியா கூறியிருப்பதாவது:

2004 தேர்தல் வெற்றிக்குப் பிறகு, பிரதமர் பதவியை நிராகரிக்க முடிவு செய்த பிறகு, அந்தப் பதவிக்கு வேறு யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற முடிவை எடுக்க வேண்டியிருந்தது.

அந்தப் பதவியை அனுபவமும் தகுதியும் வாய்ந்த பல மூத்த தலைவர்கள் ஏற்கத் தயாராக இருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரிலும், நீண்ட காலமாக எனது பார்வையில் பழிச் சொல்லுக்கு அப்பாற்பட்டவராகவும், ஆளுகை குறித்த ஆழ்ந்த மற்றும் முழுமையான புரிதலைக் கொண்டவராகவும் இருந்தவர் மன்மோகன் சிங்.



சுயசரிதையில் சோனியா தகவல்

கோப்புப் படம்

அனுபவம் வாய்ந்த பொருளாதார நிபுணரான அவர், 1990–களின் முற்பகுதியில் அப்போதைய பிரதமர் பி.வி. நரசிம்ம ராவ் தலைமையில் இந்தியாவில் பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திய நிதி அமைச்சராக இருந்தார்.

அவர் கட்சியில் எந்த அணியுடனும் அங்கம் வகிக்கவில்லை. மேலும், பல ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட கட்சியின் கொள்கைகளை நிர்வகித்துத் தொடரும் நமது திறனைப் பற்றிய பலரின் சந்தேகங்களை மன்மோகன் சிங் தணிப்பார் என்ற நம்பிக்கை இருந்தது.

அறிஞராகவும், தொழில்நுட்ப நிபுணராகவும் அவர் ஆற்றிய சாதனைகளைத் தவிர, அன்பான மற்றும் இரக்கமுள்ள இதயத்தை அவர் கொண்டிருந்தார். அவரின் நேர்மையை கேள்விக்குட்படுத்த முடியாது. எனவே, நமது அன்புக்குரிய நாடு மன்மோகன் சிங் கைகளில் பாதுகாப்பாக இருக்கும் என்று எனக்குத் தெரியும்.

இது குறித்து, கட்சியின் மூத்த சகாக்களுடன் நான் கலந்தாலோசனை நடத்தினேன். அப்போது, அவர்கள் எனது முடிவை ஓரளவு ஏற்றுக் கொண்டதாகத் தோன்றியது. அவர்களிடம் மன்மோகன் சிங்கின் பெயரைப் பரிந்துரைத்த போது அவர்கள் அதை எதிர்க்கவில்லை. அவரின் அனுபவத்தின் ஆழத்தையோ அல்லது இந்தியாவுக்கு நன்மை செய்யும் கண்ணியமான மனிதர் என்ற அவரது நற்பெயரையோ யாராலும் மறுக்க முடியவில்லை.



புது தில்லியில் உள்ள புத்தகக் கடையில் விற்பனைக்கு வைக்கப்பட்ட சோனியா காந்தியின் சுயசரிதை.

பிரணாபுக்கு பிரதமராகும் விருப்பம்...: ஐக்கிய முற்போக்கு ஆட்சிக் காலத்தில், அரசை நான் பின்னால் இருந்து இயக்குவதாக விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், அப்போது மன்மோகன் சிங்தான் பிரதமர் என்பதில் நான் தெளிவாக இருந்தேன்.

கட்சித் தலைவர் என்ற முறையில் எனது கருத்தையோ ஆலோசனையையோ அவருக்குத் தெரிவிக்கலாம் அல்லது அவருடன் முரண்படலாம் என்றாலும், அவருக்குக் கட்டுப்பட்டு நடப்பது எனது கடமை என்பதில் தெளிவாக இருந்தேன்.

குறிப்பாக, எதிரிகள் மகிழ்ச்சியடையவும், அரசை பலவீனப்படுத்தவும் வாய்ப்பளிக்கும் எந்தவொரு தவறான புரிதலுக்கு எந்தச் சூழல்நிலையிலும் நான் காரணமாக இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்.

கட்சிக்கும் அரசுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வைச் சுட்டிக்காட்டும் அதே வேளையில், பிரணாப் முகர்ஜி பிரதமராகும் தனது விருப்பத்தை சூசகமாகத் தெரிவித்த நிகழ்வையும் தனது சுயசரிதையில் சோனியா விவரித்துள்ளார்.

2010–ஆண்டு காலகட்டத்தில் பிரணாப் முகர்ஜிக்கும், மத்திய நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரத்துக்கும் இடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. அப்போது நடைபெற்ற ஓர் உரையாடலின்போது, 'ஒரு வேளை தலைமைப் பொறுப்பில் மாற்றம் தேவைப்படலாம்' என்ற கருத்தைக் கூறி என்னை பிரணாப் முகர்ஜி அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

இதன் மூலம், பிரதமர் ஆக வேண்டும் என்ற அவரின் நீண்ட கால விருப்பத்தை சூசகமாகத் தெரிவித்ததாக புரிந்துகொண்டேன். அதைத் தொடர்ந்து மெதுவாக பேச்சை மாற்றினேன். இதனால், அவர் ஏமாற்றமடைந்திருக்கலாம் என்றாலும், அதை அவர் ஒருபோதும் வெளிக்காட்டவில்லை.

அதைத் தொடர்ந்து, 2012–ஆம் ஆண்டு மிக உயரிய குடியரசுத் தலைவர் பதவிக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணியின வேட்பாளராக காங்கிரஸ் பரிந்துரைத்து, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று சோனியா குறிப்பிட்டுள்ளார்.

பிரதமராக பிரணாப் முகர்ஜி ஆசைப்பட்டதில் அதிர்ச்சி அடைய என்ன உள்ளது?

சோனியாவுக்கு சர்மிஷ்டா கேள்வி



புது தில்லி, நவ.10: 'மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவராகவும் இருந்த பிரணாப் முகர்ஜி பிரதமராக ஆசைப்பட்டதில் அதிர்ச்சி அடைய என்ன உள்ளது' என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்திக்கு பிரணாப் முகர்ஜியின் மகள் சர்மிஷ்டா முகர்ஜி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'பிரதமராக பிரணாப் முகர்ஜி ஆசைப்பட்டதில், அதிர்ச்சி அடைய என்ன உள்ளது? பல பதிற்றாண்டுகளாக அரசியல் மற்றும் நிர்வாக அனுபவம், கடின உழைப்பு, அறிவாற்றல் ஆகியவை இருக்கும்போது லட்சியத்துடன் ஒருவர் இருப்பது குற்றமா?

எனது தந்தை மிகவும் எளிய பின்னணியில் இருந்து வந்தவர். அவர் என்னவெல்லாம் சாதித்தாரோ, அவை எல்லாம் அவரின் கடின உழைப்பு மற்றும் திறமையால் நிகழ்ந்தவை. வாரிசு அரசியல் காரணமாக, அவருக்குப் பிரதமர் பதவி உள்பட எந்தப் பதவியும் எளிதாகக் கிடைக்கவில்லை.

ஒரு தகுதியான நபர் பிரதமராக வேண்டும் என்று ஆசைப்படுவதில் என்ன தவறு உள்ளது? நேரு குடும்பத்தைச் சாராத ஒருவர் பிரதமராக வேண்டும் என்ற ஆசையை வளர்த்துக் கொள்ளத் துணிந்துவிட்டாரே? அதைவிட துணிச்சலாக, அந்த விருப்பதை தன்னிடமே மறைமுகமாகக் கூறிவிட்டாரே என்ற காரணத்தால் சோனியா அதிர்ச்சி அடைந்திருந்தால் தவிர, இதில் தவறு ஏதும் இல்லையே என்று பதிவிட்டுள்ளார்.

இந்திய அரசு
பாதுகாப்பு அமைச்சகம்
முன்னாள் இராணுவத்தினர் பங்களிப்பு சுகாதாரத் திட்டம்
நிலைய தலைமையகம் (ECHS CELL) சென்னை
தொலைபேசி: 044 - 2567 0121 மின்னஞ்சல்: echschennai@gmail.com
வேலைவாய்ப்பு அறிவிப்பு

1. ECHS, சென்னை மற்றும் புதுச்சேரியில் உள்ள ECHS பல்நோக்கு மருத்துவமனைகளில், முன்னாள் ராணுவ வீரர்களுக்கு (ESMs) ஓராண்டு காலத்திற்கும், அரசுப் பணியாளர்களுக்கு (civilian candidates) 11 மாத காலத்திற்கும், பின்வரும் ஆயுர்வேத மருத்துவர், ஆயுர்வேத துணை மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்காக விண்ணப்பங்களை வரவேற்கிறது.

வ. எண்	நியமனம்	குறைந்தபட்ச தகுதி	இடம் மற்றும் காலியிடங்களின் எண்ணிக்கை	நிலையான ஊதியம் (ரூ)/மாதம்
1.1	ஆயுர்வேத மருத்துவர்	தேசிய இந்திய மருத்துவ முறை ஆணையத்தால் (NCISM) அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் இருந்து பெற்ற BAMS பட்டம். NCISM அல்லது அதற்கு இணையான மாநில மருத்துவ வாரியம் / கவுன்சிலில் செல்லுபடியாகும் பதிவு மற்றும் உள்ளகப் பயிற்சிக்குப் பிறகு 3 வருட பணி அனுபவம்.	சென்னை-01	ரூ. 95,000/-
1.2	ஆயுர்வேத மருந்தாளுநர்	தற்போதுள்ள விதிகள்/ஒழுங்குமுறைகளின் கீழ் மத்திய/மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் இருந்து பெற்ற பி.பார்மா அல்லது டி.பார்மா (ஆயுர்வேதம்) பட்டம். சம்பந்தப்பட்ட மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் தற்போதுள்ள விதிகள்/ ஒழுங்கு முறைகளின்படி செல்லுபடியாகும் பதிவு மற்றும் 3 வருட பணி அனுபவம்.	சென்னை-01	ரூ. 36,500/-
1.3	துப்புரவுப் பணியாளர்	எழுத்தறிவு மற்றும் 5 வருட பணி அனுபவம்	சென்னை-01 புதுச்சேரி-01	ரூ. 21,800/-

2. **விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், விண்ணப்ப படிவம் மற்றும் ஊதியம் ஆகியவற்றுக்கு** தயவுசெய்து எங்கள் இணையதளமான www.echs.gov.in- ஐப் பார்க்கவும். கூடுதல் விவரங்களுக்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியில், சென்னையில் உள்ள ஸ்டேஷன் தலைமையகத்தை (ECHS பிரிவு) தொடர்பு கொள்ளவும். மேலும் விவரங்களுக்கு, சம்பந்தப்பட்ட E C H S பாலி கிளினிக்கையும் அணுகவும். முன்னாள் ராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். பொதுமக்களும் விண்ணப்பிக்கலாம்.

3. **எங்கள் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி தேதி** தேவையான படிவத்தின்படியான விண்ணப்பத்துடன், கல்வித் தகுதிகள் மற்றும் பணி அனுபவங்களை ஆதரிக்கும் சான்றிதழ்களின் சுயசான்றளிக்கப்பட்ட நகல்களையும் இணைத்து, மேலே பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு, முத்திரையிடப்பட்ட உறையில் இரண்டு பிரதிகளில் OIC ECHS Cell, Stn HQ, Fort Saint George, Chennai-600 009 என்ற முகவரிக்கு **09 டிசம்பர் 2026- க்குள்** சமர்ப்பிக்க வேண்டும். 09 டிசம்பர் 2026-க்குப் பிறகு பெறப்படும் எந்தவொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்படாது.

4. **நேர்காணல் தேதி, நேரம் மற்றும் இடம்.** தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள், மின்னஞ்சல்/குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும் தேதி மற்றும் நேரத்தில், ஸ்டேஷன் தலைமையகம், Fort Saint George, சென்னை-600009-ஐ வந்தடைய வேண்டும். விண்ணப்பதாரர்கள் நேர்காணலின் போது அனைத்து அசல் சான்றிதழ்கள்/மதிப்பெண் தாள்கள்/பணி அனுபவம் மற்றும் பணிவிடுப்புப் புத்தகம், PPO, சேவைப் பதிவேடுகள், 02 x பாஸ்போர்ட் அளவு வண்ணப் புகைப்படங்கள் மற்றும் பிற தேவையான ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும். பயணப்படி/தினப்படி வழங்கப்படாது. தகுதித் தேவைகளைப் (QR) பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்

கோயம்புத்தூர் மாவட்டம்
வெள்ளலூர் (சிறப்பு நிலை) பேரூராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண்.1197/2026 நாள்.05.11.2026

கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர் சிறப்புநிலை பேரூராட்சியில் முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கம் (CMIUDM) 2026-2027 திட்டத்தின் கீழ் ரூ.183.50 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ளலூர் தார்சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் வாயிலாக மட்டுமே வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரம் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
அ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் - 28.11.2026 பிற்பகல் 3.00 மணி வரை
ஆ) தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறத்தல் - 28.11.2026 பிற்பகல் 3.30 மணி
இ) கூர்ந்தாய்வில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி திறத்தல் - 30.11.2026 முற்பகல் 11.00 மணி
3. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கண்ட இணையதளம் வாயிலாக திறக்கப்படும்.

(ஒம்) தலைவர், வெள்ளலூர் பேரூராட்சி, கோயம்புத்தூர் – 641 111.
செ.ம.தொ.இ.3482/ஒப்பந்தப்புள்ளி/2026
(ஒம்) செயல் அலுவலர், வெள்ளலூர் பேரூராட்சி, கோயம்புத்தூர் – 641 111.

THE BHARATHI CO-OPERATIVE SPINNING MILLS LTD., TNH 101,
Post Bag No. 1, Vilathikulam Road, ETTAYAPURAM – 628 902.
Phone : 04632 – 271260 / 04632 – 271332
TIN No. 33965880334/01.01.2007 CST No. 469267/03.11.1982
GST No.33AAAAT3204C1ZA - E-mail-bharathicoopspg@gmail.com
Ref.No. BCSM/Conversion Tender -1/2026-2027 Date: 04.11.2026
NOTICE INVITING TENDER FOR CONVERSION OF SINGLE CONE YARN INTO SINGLE HANK / DOUBLED CONE / DOUBLED HANK YARN.
E-Tenders in Two cover system (Online Technical Bid and Online Financial Bid through e-Procurement Portal) are invited from reputed firms for the Conversion of Single Cone Yarn into Single Hank Yarn / Double Cone / Hank Yarn for the Bharathi Co-operative Spinning Mills ltd., Ettayapuram, Thoothukkudi District, TamilNadu for a period of one year.

Sl. No.	Name of the work	Approximate Quantity	Required Earnest Money Deposit in (Rs.)	Tender Document availability on the portal	Date closing of e-submission of Technical and Financial bids	Date, time and place of opening of Technical Bids
1	Conversion of Single Cone Yarn into Single Hank Yarn/Double Cone/ Hank Yarn	800MT	1,00,000/-	12.11.2026 to 26.11.2026 upto 10.30 a.m	26.11.2026 upto 11.00 a.m	27.11.2026, 12.00 Noon at Bharathi Cooperative Spinning Mills Ltd., Ettayapuram.

The tender documents can be downloaded at **free of cost** from the Government website **https://tntenders.gov.in.** Eligibility of the Tenderer and other conditions are stipulated in the Tender Schedule.
DIPR/3487/Tender/2026 ADMINISTRATIVE OFFICER (IC), TENDER INVITING AUTHORITY.

CHANGE OF NAME
I, ANTONY SILUVAI LIBERT S/o. ALPHONSE, Born on 31.07.1967 (Native District Tirunelveli) residing at Door No: 336/1 Raja Street, Uvari Tisayanvilai Taluk, Tirunelveli District - 627651. Shall be hence forth known as **LIBART**
Antony Siluvai Libert

தேர்தல் நடத்தை விதிகள்

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும் பொருந்தும்: ஆணையம்

புது தில்லி, நவ. 10: 'தேர்தல் நடத்தை விதிகளின் (எம்சிசி) கீழ் அரசு ஊழியர்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், தடைகள் உள்ளிட்டவை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும் பொருந்தும்' என்று தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

பல்வேறு பதவிகளில் மாநில அரசால் மீண்டும் பணியமர்த்தப்பட்ட ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் கூட்டங்களைக் கூட்டியதாக கடந்த காலங்களில் எழுந்த புகார்களைத் தொடர்ந்து, இந்த அறிவுறுத்தலை தேர்தல் ஆணையம் அளித்திருப்பதாக ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்கும் கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தர பிரதேசம், உத்தரகண்ட் ஆகிய 5 மாநில தலைமைச் செயலர்களுக்கு தேர்தல் ஆணையம் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தேர்தல் நடத்தை விதிகளின் கீழ் உள்ள விதிகள், அரசிடமிருந்து முழுமையாக அல்லது பகுதியாக நிதியைப் பெறும் அமைப்புகள், குழுக்கள், மாநகராட்சிகள், ஆணையங்கள் உள்ளிட்ட அனைத்துக்கும், அதில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் பொருந்தும்.

இந்த விதிகளின் கீழ், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளபோது அரசு ஊழியர்கள் அரசியல் நடவடிக்கைகளிலோ, தேர்தலிலோ பங்கேற்கத் தடைவிதிக்கப்படும். இது, பல்வேறு அரசுப் பதவிகளில் மீண்டும் பணியமர்த்தப்பட்ட ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும் பொருந்தும்.

எனவே, நடத்தை விதிகள் அமலில் உள்ள போது, அரசு ஊழியர்களும், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களும் அரசியல் நடுநிலையைக் கடைப்பிடித்து, தேர்தல் பிரசாரங்களிலோ அல்லது வாக்கு சேகரிப்பிலோ ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

மேலும், தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள தொகுதி அல்லது மாவட்டத்தின் தேர்தல் தொடர்பான எந்தவொரு அதிகாரியையும், அலுவல் சார்ந்த கலந்துரையாடல்கள் அல்லது சந்திப்புகளுக்கு, மீண்டும் பணியமர்த்தப்பட்ட ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் அழைக்கக் கூடாது. காணொலிவழி கூட்டங்களையும் நடத்தக் கூடாது.

மாநிலங்கள் இதைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இந்த வழிகாட்டுதலை மீறுவது கடுமையாகக் கருதப்படும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் கோதுமை சாகுபடி புதிய உச்சம் எட்டும்

ஐ.நா. உணவு, வேளாண்மை அமைப்பு தகவல்

புது தில்லி, நவ. 10: நடப்பு பருவத்தில் இந்தியாவில் கோதுமை சாகுபடி இதுவரை இல்லாத அளவுக்கு புதிய உச்சத்தை எட்டும்; எனினும், 2027 ஏப்ரல், மே வரையிலான வானிலை நிலவரத்துக்கு ஏற்ப விளைச்சல் அமையும் என்று ஐ.நா. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்திய வானிலையில் தற்போது நிலவி வரும் 'எல்–நினோ' தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் முதல் ஜூன் மாதம் வரையில் அறுவடை காலத்துக்கு ஏற்ப, இந்தியா மற்றும் தூர கிழக்கு ஆசிய நாடுகளில் தற்போது கோதுமை விதைப்பு நடைபெறுகிறது.

2025–இல் இந்தியாவின் கோதுமை உற்பத்தி 117.19 மில்லியன் டன்னாக இருந்தது. இது 2026–ஆம் ஆண்டில் 120.7 மில்லியன் டன்னாக உயர்ந்து புதிய உச்சத்தை எட்டியது. கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி கோதுமை உற்பத்தி 111.8 மில்லியன் டன்னாக இருந்த நிலையில், 2026–ஆம் ஆண்டில் விளைச்சல் கணிசமாக அதிகரித்தது.

அரசின் ஆதரவு: இந்தியாவில் கோதுமை சாகுபடி பரப்பு புதிய உச்சத்தை எட்டும் என எதிர்பார்ப்பதற்கு அரசின் ஊக்கத்திட்டங்களே முக்கியக் காரணம் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது. குறிப்பாக, விவசாயிகளுக்கு லாபகரமான குறைந்தபட்ச ஆதரவு விலை, உர மானியங்கள் ஆகியவை கோதுமை சாகுபடியை அதிகரிக்க விவசாயிகளை ஊக்குவித்துள்ளது.

சீனா, பாகிஸ்தான்: தூர கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய கோதுமை உற்பத்தி நாடான சீனாவில், கோதுமை சாகுபடி பரப்பு கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி அளவிலேயே இருக்கிறது.

பாகிஸ்தானில், உள்நாட்டுச் சந்தையில் கோதுமையின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதால், விவசாயிகள் கூடுதல் பரப்பில் கோதுமை சாகுபடி செய்ய வாய்ப்புள்ளது. இதனால் அந்நாட்டிலும் கோதுமை சாகுபடி பரப்பு சராசரியை விட அதிகரிக்கும். அதே நேரத்தில் 'எல்–நினோ' விளைவால் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் கோதுமை சாகுபடி நடைபெறும் முக்கியப் பகுதிகளில் சராசரியை விட அதிக மழைப்பொழிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்று ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

Piramal Finance
பிரமல் ஃபைனான்ஸ் லிட். CIN: L64910MH1984PLC032639
பதிவு அலுவலகம்: யூனிட் எண்.601, 6-வது மாடி, பிரமல் அமிதி கட்டிடம், பிரமல் அகஸ்தியா கார்ப்பரேட் பார்க், காமணி சந்திப்பு, தீயணைப்பு நிலையம் எதிரில், LBS மார்க், குர்லா, மேற்கு மும்பை-400 070. தொ.பே.+91 22 3802 4000
கிளை அலுவலகம்: 171A & 171B LBR காம்ப்ளக்ஸ், ராஜா நாயுடு சாலை, சிவானந்தா காலனி, கோயம்புத்தூர்- 641012
தொடர்பு நபர்: 1. பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட்- 022-69482444

E-ஏல விற்பனை அறிவிப்பு- அடுத்த விற்பனை

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ், கடன்தாரர்களிடமிருந்து வர வேண்டிய கடன் பாக்கியை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனுக்கு ஈடான அடமான சொத்துகள், **பிரமல் ஃபைனான்ஸ் லிட்.**-ன் (முன்னர் பிரமல் கேபிடல் அண்ட் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்) அதிகாரபூர்வ அலுவலரால் சுவாதீனத்தில் (POSSESSION) எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, கீழே விவரிக்கப்பட்டுள்ள சுவாதீனத்தில் (POSSESSION) உள்ள அசையா சொத்துகள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்காக விலைப்புள்ளிகள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் வரவேற்கப்படுகின்றன. இதுபற்றிய விவரங்கள் பின்வருமாறு:

கடன் குறியீடு / கிளை / கடன்தாரர்கள் / கூட்டுக்கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்	கேட்பு அறிவிப்புத் தேதி & தொகை ரூ.	சொத்து முகவரி இறுதி	ரிசர்வ் விலை ரூ.	EMD தொகை ரூ. (RP யில் 10%)	மொத்த கடன் பாக்கி ரூ.(05.11.2026)
கடன் குறியீடு எண்: 03300003538 & 29600000266, திருநெல்வேலி (கிளை), ஜெகதீஷ் S (கடன்தாரர்), ராஜேஸ்வரி K (இணை கடன்தாரர்1)	தேதி: 30-01-2023, ரூ.1,00,41,250/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தோராயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) & தேதி: 30-01-2023, ரூ. 19,02,293/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து இரண்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு: கதவு எண்: 179-186, ச.எண்: பழைய 230A/2A, புதிய 1143/1, மேலக்கோட்டை வாசல் தெரு, புதிவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம், திருநெல்வேலி, தமிழ்நாடு - 628 601. **எல்லைகள்: வடக்கு** - கிழக்கு-மேற்கு ஜாகை சாலை; **மேற்கு** - சங்கர் சொத்து; **கிழக்கு**- பூதநாதர் கோவில் நிலம்; **தெற்கு** - சிவராமலிங்கம் மற்றும் ராஜா சொத்து.	ரூ. 65,50,000/- (ரூபாய் அறுபத் தைந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	ரூ. 6,55,000/- (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்தைந் தாயிரம் மட்டும்)	ரூ.1,48,92,743.86/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து எட்டு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று மற்றும் எண்பத்து ஆறு பைசா மட்டும்) & ரூ.28,83,544.86/- (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து எண்பத்து மூவாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து நான்கு மற்றும் எண்பத்து ஆறு பைசா மட்டும்)
கடன் குறியீடு எண்: HLSA0005E08D & HLSA0005E08DTU, தென்காசி - மட்டப்பா தெரு (கிளை), அரிராமர் (கடன்தாரர்), கீவாவதி (இணை கடன்தாரர் 1)	தேதி: 25-06-2025, ரூ.21,63,201/- (ரூபாய் இருபத்தோரு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து இருநூற்று ஒன்று மட்டும்) & தேதி: 25-06-2025, ரூ.18,03,520.18/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று இருபது மற்றும் பதினெட்டு பைசா மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அவற்றின் அனைத்து முக்கிய பகுதிகளும், தென்காசி பதிவு மாவட்டம், பாவூர்சத்திரம் சார்பதிவாளர் அலுவலகம், பெத்தநாடார் பட்டி பகுதி-1 கிராமம், பெத்தநாடாப்பட்டி ஊராட்சி, 8-வது வார்டு, பூ பாலசமுத்திரம், பிள்ளையார் கோவில் தெரு, நத்தம் சர்வே எண் 537/27 பரப்பளவு 1.235 செண்ட் (0.00.50 ஹெக்டேர்) மற்றும் சர்வே எண் 537/24 பரப்பளவு 2.47 செண்ட் (0.01.00 ஹெக்டேர்) என மொத்தம் 3.705 செண்ட் (150 சதுர மீட்டருக்கு சமம்) நிலம். இதில் புதிய குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. **எல்லைகள்: வடக்கு**- இசக்கி வேல்ராஜ் வீடு மற்றும் பொதுப் பாதை; **மேற்கு** - பாலசாமி வீடு; **கிழக்கு** - தங்கசாமி வீடு; **தெற்கு** - கிழக்கு-மேற்கு சாலை.	ரூ. 36,20,000/- (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து இருபதா யிரம் மட்டும்)	ரூ. 3,62,000/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தி ரண்டாயிரம் மட்டும்)	ரூ.26,72,469.38/- (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து நானூற்று அறுபத்து ஒன்பது மற்றும் முப்பத்து எட்டு பைசா மட்டும்) & ரூ.22,64,806.56/- (ரூபாய் இருபத்திரண்டு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து எண்ணூற்று ஆறு மற்றும் ஐம்பத்து ஆறு பைசா மட்டும்)
கடன் குறியீடு எண்: BLSA000303F6, தூத்துக்குடி (கிளை), ஜேக்கப் செல்வராஜ் ராஜரத்தினம் (கடன்தாரர்) அகஸ்டா வசந்த பிரியா டேனியல் (இணை கடன்தாரர் 1)	தேதி: 29-10-2025, ரூ.76,48,820/- (ரூபாய் எழுபத்தாறு லட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு: தூத்துக்குடி பதிவு மாவட்டம், புதுக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகம், தூத்துக்குடி வட்டம், குமாரகிரி @ புதுக்கோட்டை கிராமம், நத்தம் மனைவரி பட்டா எண்:140, பழைய நத்தம் சர்வே எண்: 304 பகுதி, புதிய நத்தம் சர்வே எண்: 304/4 நிலத்தின் பரப்பளவு 338 சதுர மீட்டர் மற்றும் வீடு, கதவு எண்: 3/189. **அதன் எல்லைகள்: வடக்கு:** கிழக்கு மற்றும் மேற்கு சாலை; **மேற்கில்:** புஷ்ப ரதி W/O.பரிசுத்த ராஜ் வீடு; **கிழக்கில்:** வடக்கு - தெற்கு சாலை; **தெற்கில்:** கிழக்கு – மேற்கு சாலை.	ரூ. 70,10,000/- (ரூபாய் எழுபது லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	ரூ. 7,01,000/- (ரூபாய் ஏழு லட்சத்து ஓராயிரம் மட்டும்)	ரூ.92,16,698.47/- (ரூபாய் தொண்ணூற்று இரண்டு லட்சத்து பதினாறாயிரத்து அறநூற்று தொண்ணூற்று எட்டு மற்றும் நாற்பத்து ஏழு பைசா மட்டும்)

E-ஏலத்தின் தேதி: 27-11-2026, காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை(ஒவ்வொரு முறையும் 5 நிமிடங்களுக்கு வரம்பற்ற கால நீட்டிப்புடன்), ஏலத்தைச் சமர்ப்பிக்க கடைசித் தேதி: 26-11-2026, மாலை 4.00 மணிக்கு முன்.
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு www.piramalfinance.com/e-Auction.html இல் வழங்கப்பட்ட இணைப்பைப் பார்க்கவும் அல்லது piramal.auction@piramal.com இல் எங்களுக்கு மின்னஞ்சல் செய்யவும்.
கடன்தாரர் /ஜாமீன்தாரர் /அடமானதாரர் அவர்களுக்கு SARFAESI சட்டத்தின் கீழ் சட்டப்படியான 15 நாள் விற்பனை அறிவிப்பு:
மேற்படி கடன்தாரர், ஜாமீன்தாரர் அவர்களுக்கு இதன்மூலம் அறிவிப்பதாவது: சட்டம் பிரிவு 13 (2) அறிவிப்பின் படி மேற்படி பாக்கித் தொகையை வட்டியுடன் சேர்த்து முழுவதுமாக ஏல தேதிக்கு முன்னதாக செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது. தவறினால், சொத்தானது ஏலத்தில் விடப்படும் / விற்கப்படும். அதன் பிறகும் பாக்கி இருந்தால் அதுவும் வட்டி, செலவுகளுடன் கடன்தாரர், ஜாமீன்தாரர் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.
கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு 8-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், திட்டமிட்ட படி எந்தவொரு காரணத்தினாலும் ஏலம் நடைபெறாமல் போனால் இந்நிறுவனம் கடனுக்கு ஈடான சொத்தினை தனி ஒப்பந்தத்தின் (PRIVATE TREATY) மூலம் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கும்.
தேதி: 11.11.2026 \| இடம்: ROTN ஒம்/- அதிகாரபூர்வ அலுவலர், பிரமல் ஃபைனான்ஸ் லிட்.

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்களா, பெங்களூர்-560095.
இ-ஏல விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.
SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தார்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை in INR	டேவணித்தொகை (EMD) in INR
கிளை அலுவலகம்: வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோவில் பேருந்து நிறுத்தம் எதிரில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோவில், தமிழ்நாடு-629001					
1.	1658210180000037 1.Mr.சசிகுமார் 2.Mrs.ராணி சத்தியநேசன்	(i) 08.09.2022 (ii) 06.09.2022 அன்றுள்ளபடி ₹ 27,36,722/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து முப்பத்தாறாயிரத்து எழுநூற்று இருபத்திரண்டு மட்டும்) (ii) 12.12.2023 (அடையாளபூர்வ) & 20.11.2024 (நேரடியான)	07.11.2026 அன்றுள்ளபடி ₹ 47,52,749/- (ரூபாய் நாற்பத்து ஏழு லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஒன்பது மட்டும்)	₹ 25,82,000/- (ரூபாய் இருபத்து ஐந்து லட்சத்து எண்பத்து இரண்டாயிரம் மட்டும்)	₹ 2,58,200/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து இருநூறு மட்டும்)

சொத்து விவரம் பழுகல் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **பழைய சர்வே எண்கள்**.2191B, **புதிய சர்வே எண்**.469/13A1, **பட்டா எண்**.5011, **இடைக்காடு கிராமம், விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியில் 6 சென்ட் (242.82 சதுர மீட்டர்), சொத்து, 4.5 அடி வழிப்பாதை உட்பட**, அதனுடன் அனைத்து இதர உபகரணங்கள், அதனுடன் வழிப்பாதை உரிமைகள் மற்றும் அனுமந்த உரிமைகள், பொருத்தப்பட்டுள்ளவைகள், எல்லைகள்: கிழக்கு: கனகதாஸ்-க்கு சொந்தமான சொத்து மற்றும் மற்றவர்கள், மேற்கு: மனோன்மணி-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: விஜயன்-க்கு சொந்தமான சொத்து, வடக்கு: ஜெயசான்-க்கு சொந்தமான சொத்து.

கிளை அலுவலகம்: தரை & முதல் தளம், ப்ளாக் எண்.6, பிராமினர் தெரு, காஞ்சிபுரம் - செங்கல்பட்டு ரோடு, J C K நகர், செங்கல்பட்டு, தமிழ்நாடு 603001					
2.	1658210080000070 1.Mr.ராஜன்.R 2.Mrs.சஜிதா.R 3.Mrs.தங்க ராஜி	(i) 27.11.2021 & 26.11.2021 அன்றுள்ளபடி ₹ 3,65,863/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று மட்டும்) (ii) 18.04.2022 (அடையாளபூர்வ) 25.03.2023 (நேரடியான)	07.11.2026 அன்றுள்ளபடி ₹ 5,11,198.22 (ரூபாய் ஐந்து லட்சத்து பதினோராயிரத்து நூற்று தொண்ணூற்று எட்டு மற்றும் பைசா இருபத்து இரண்டு மட்டும்)	₹ 6,01,000/- (ரூபாய் ஆறு லட்சத்து ஒன்றாயிரம் மட்டும்)	₹ 60,100/- (ரூபாய் அறுபது லட்சத்து நூறு மட்டும்)

சொத்து விவரம் : மார்த்தாண்டம் பதிவு மாவட்டம் மற்றும் கோலங்கோடு சார் பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.5560, மறு சர்வே எண்.622/2, பட்டா எண்.252, **மேத்துக்கும்மல் கிராமம், விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியில் 1.250 சென்டு நிலம் மற்றும் கட்டிடம்**, அதனுடன் அனைத்து உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: (1வது ஐட்டம்): கிழக்கு: மணி-ன் புஞ்சை சொத்தின் பகுதி, மேற்கு: தொசம்மாள்-க்கு சொந்தமான புஞ்சை சொத்து மற்றும் மற்றவர்கள், தெற்கு: செல்லகன் புஞ்சை சொத்தின் பகுதி, வடக்கு: வழிப்பாதை (VAO படி சான்றிதழ்).

இ-ஏல தேதி மற்றும் நேரம் 26.11.2026 - காலை 10.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி:	சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:
25.11.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	24.11.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி:
வ.எண்.1: Mr.பாரதன் – 93622 76767 / கிருபாகர் ராதாகிருஷ்ணன் – 94455 08743 / R.புஷ்பகாந்த் – 9843114222
வ.எண்.2: Mr. ஞானவேல் - 98410 17131/ Mr. கிருபாகரன் – 94455 08743

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. தொடர்புக்கு: **வ.எண்.1: Vinod Chauhan - Mob: 98138 87931 & வ.எண்.2: Mr.பிரபாகரன் - Mob.74182 81709** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம். i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**
ஒப்பம்/-
தேதி: 11.11.2026, இடம்: பெங்களூரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி , உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்